பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

பொதுசன நூலகம்
- 1 DEC 2000


# வலம்புரி
VALAMPURI


லாலா சோப
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
அம்பிகை களஞ்சியம்
மந்திகை (மார்கட்)
புலோலி
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 16 வெள்ளிக் கிழமை (01-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 347

### சமாதான முயற்சியில் புதியதோர் திருப்பம்

## அரசு - புலிகள் தமக்கிடையே முக்கியஆவணங்களைபரிமாறினர்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெறவுள்ள பூர்வாங்க சமாதானப் பேச்சுகளுக்கு முன்னதாக சில ஆவணங்கள் இருசாராருக்கு மிடையே பரிமாறப்பட்டுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அரசியல் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். நோர்வே அரசின் விஷேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் வன்னிக்கு சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன்பேச்சுக்கள் நடத்திய பின்னரே இந்த ஆவணங்கள் பரிமாறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசும்—புலிகளும் பரிமாறிக் கொண்ட ஆவணங்களில் முக்கியமாக; பேச்சுவார்த்தை தொடர்பாக அரசின் (→ 8ஆம் பக்கம் பார்க்க)

## போலியோ சொட்டுமருந்து நாளை வழங்கப்படும்

(தென்மராட்சி)

நாளை 2 ஆம் திகதி போலியோ சொட்டு மருந்து திட்டமிட்டபடி வழங்கப் படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து மேற்படி சொட்டுமருந்து விமான மூலம் எடுத்து வரப்பட்டதை அடுத்தேஇவ் ஏற்பாடுகள மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் ஏனைய சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்து கட்டாயமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

### இன்றும் நாளையும் யுத்த நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கப் படுவதையடுத்து இன்றும் நாளையும் யுத்த நிறுத்தம் ( 8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ வவுனியா-மன்னார் வீதியில் ★

# கண்ணிவெடி;ட்ரக்வண்டிசிதறியது 10ராணுவம் பலி; 13பேர் படுகாயம்

### காயமடைந்தோரில் பலர்கவலைக்கிடம்

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா மன்னார் வீதியில் நேற்று இடம்பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலின்போது 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 13 இராணுவத்தினர் காயமடைந்துமுள்ளனர்.

காயமடைந்த இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலையிலும் அதன்பின் மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மன்னார் வீதியில் பூவரசங் குளத்திற்கும் பறையனாலங் குளத்திற்கும் இடையில் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி வெடித்ததனாலேயே இச்சம்பவம் இடம் பெற்றது

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்ற இக்கண்ணி வெடித் தாக்குதலின் போது 6படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். காயமடைந்த 17 படையினரை வைத்திய (8ஆம் பக்கம் பார்க்க)

## "லங்கா முடித்த" இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை செல்லும் 'லங்கா முடித்த' பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறுமென யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்ய பயண அனுமதி, பயணச் சீட்டு பெற்றவர்கள் இன்று காலை 7 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறும் சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது.

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் நீண்ட நாட்களாக பெரும் இழுபறி, சர்ச்சைக்குட்பட்டிருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி மீண்டும் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க முன்னிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்த சத்தியப் பிரமாணம் செய்து தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதே சமயம் பிரதி நிதியமைச்சராக பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சத்தியப் பிரமாணம்செய்துகொண்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கிளைமோர் தாக்குதல் 4கடற்படையினர் பலி, 4பேர்காயம்

(திருமலை)

கடற்படை உயர் அதிகாரிகள் பிரயாணம் செய்த வாகனமொன்றின்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்துமுள்ளனர்.

இக்கிளைமோர்த் தாக்குதல்பற்றி மேலும் தெரிவிக்கப் படுவதாவது:

நேற்று பிற்பகல் 1-45மணியளவில் திரியாய் என்னும் (8ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமரை ஜனாதிபதி சந்திப்பார்

(இலண்டன்)

இலண்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த வாரம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலண்டனுக்கான இலங் → 8ம் பக்கம் பார்க்க

### பிரபாவின் மாவீரர்தின உரைக்கு பதிலளிக்க

## ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் பீற்றர் ஹெய்னுடன் பேசுவார்!

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு நீண்ட சமாதானப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பிரிட்டிஷ் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னுடன் இவ்வார முற்பகுதியில் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

இவ்வாறு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலய உயர் அதிகாரி ஒருவர் வெளியிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசு அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையையடுத்து ஜனாதிபதி பிரிட் (8ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணத்திற்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் பல்வேறு யுத்தநெருக்கடியின் காரணமாக இடம் பெயர்ந்துள்ள 2 லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்குவதற்கென 8 கோடி 84 லட்சம் ரூபாவை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-வி)

## பிரபாவின் மாவீரர்தின உரையில் "தமிழீழம்" பற்றி குறிப்பிடவில்லை!

### அதுவே சமாதானத்தின் அறிகுறி என்கிறார் கார்ல்

(கொழும்பு)

இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு சாதகமான மூன்று விடயங்களை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையில் வெளிப்படுத்தியுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் கார்ல் இண்டர் பேர்த் தெரிவித்துள் → 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு நடாத்தும்

# சமயஅறிவுப்போட்டி 2000

கல்வித் திணைக்களங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே 04 பிரிவுகளைக்கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) பின்வரும் நான்கு நிலையங்களி லும் நடாத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

**01. யா / வட இந்து மகளிர் கல்லூரி**
**02. யா / இராமநாதன் கல்லூரி**
**03. யா / கொக்குவில் இந்துக்கல்லூரி**
**04. யா / இந்துமகளிர் கல்லூரி**

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவானமேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 15-12 2000 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அன்றேல் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தோ ரூபா 20/- ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைத் திகதி;- 23-12-2000

**சைவ சமய விவகாரக் குழு**
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
(கி.1075)

---

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

# அறிவித்தல்கள்.

**1 சந்தைக்கடைகள் - ஒப்பந்தம் புதுப்பித்தல்**

நெல்லியடி, உடுப்பிட்டி உப அலுவலகப் பகுதியில் எமது சபைக்குச் சொந்தமான வாடகைக்கு விடப்பட்டுள்ள சந்தைக்கடைகளின் ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு 01-01-2001 தொடக்கம் மீள் ஒப்பந்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரர்கள் தமது ஒப்பந்த உரிமையை நிலை நிறுத்துமிடத்து !விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையின் அடிப்படையிலும் ஒப்பந்தகாரர் அல்லாதவர் கடையை நிர்வகிக்குமிடத்து நெல்லியடி சந்தைக் கடைகளுக்கு ரூபா 10,000/- ஐயும், ஏனைய பகுதிகளின் சந்தைக் கடைகளுக்கு ரூபா 5000/- ஐயும் சபைக்கு நன்கொடையாகச் செலுத்தி புதிய வாடகை அடிப்படையிலும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்களுக்கு இவ்வலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. ஆதனவரி பற்றிய அறிவித்தல்**
**(நெல்லியடி, உடுப்பிட்டி உபஅலுவலகங்கள்)**

1987ம் ஆண்டின் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டம்,

2001ம் ஆண்டிற்கான ஆதனவரிக்கான மதிப்பீடும், ஆதனவரி அறவீட்டு விகிதமும், சென்றாண்டுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும். 2001ம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31ம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ம், 2ம், 3ம், 4ம், கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, ஜூலை 31,ஒக்டோபர் 31க்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ம், 2ம், 3ம், 4ம் கந்தாயங்களுக்கான வரி முறையே 31-03-2001, 30-06-2001, 30-09-2001, 31-12-2001 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத்தவறுமிடத்து குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக்கட்டணமாக 15% மும் வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% மும் அறவிடப்படும்.

ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதன உரிமையாளர்களும், அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**3. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம்**
**(பிரிவு - 268) இன் பிரகாரமான அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்கள் புதுப்பிப்பதற்கும், பிரதேச சபையிலிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தலைவரின் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்களைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், கட்டைவேலி, நெல்லியடி, உடுப்பிட்டி உப அலுவலகங்களிலும், அறிந்து கொள்ளலாம்.

**வ. நடராசா ஜே. பி.**
தலைவர்

வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை, கரவெட்டி.
28-11.2000 (கி/1071)

---

# ஊழியர் பலருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நீண்ட காலமாக தற்காலிக ஊழியர்களாக கடமையாற்றிய பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கானநியமனக் கடிதங்களை யாழ் சிறைச்சாலை பதில் அத்தியட்சகர் சிவசுந்தரம் வழங்கினார்.

நிரந்தரநியமனம்பெற்றோர் அனைவரும் தென் பகுதியில் தொழில் பயிற்சி அனுபவம் பெற்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று 1ம் திகதி முதல் நிரந்தரநியமனம் பெறுவோர்

பத்மநாதன் டக்சன் சுதர்சன் -நவாலி
காத்திபேசு சிறிமோகன் -மீசாலை
அருளானந்தம் அருட்செல்வம் -ஈச்சமோட்டை
மகேஸ்வரன் சபேசன் -உடுவில்
செல்லத்துரை விக்னேஸ்வரன்- புன்னாலைக்கட்டுவன்
குலசேகரம் குணாளன் -கொடிகாமம்
சின்னத்தம்பி சிவசுப்ரமணியம் -பருத்தித்துறை
சிவலிங்கம் அரவிந்தன் -மானிப்பாய்
மகேந்திரன் தமயந்தினி -சுண்டுக்குளி
கந்தசாமி பரதசிவம் -உடுப்பிட்டி (க-12)

---

# பதவிஉயர்வு பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் சேவையில் உள்ளோருக்கு தரம் 11-ல் இருந்து தரம் 1-க்கு திறமையடிப்படையில் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.செயலகத்தில் நடத்தப்பட்டது இந்நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் பளைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வடபகுதியில் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு சி.பாலசுந்தரம் பளை பிரதேச செயலகம் (கிளிநொச்சி மாவட்டம்), தி.பி. கனகசபாபதி நல்லூர் (யாழ். மாவட்டம்), சி.தேவவராசா தெல்லிப்பழை, நா. கணேசு சண்டிலிப்பாய் நா. பரமசிவம் சாவகச்சேரி பே. பரமலிங்கம் புதுக்குடியிருப்பு (முல்லை மாவட்டம்) கே. ஞானேஸ்வரன் துணுக்காய் (ச)

---

**தனதுகாணியில் ..**

உயர்ந்த நோக்கை நாம் அறிந்து கொள்ளலாம்.

**ஆண்கள் கல்லூரி**

இவரின் முயற்சியால் ஆண்களுக்கென உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியே இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மிளிர்கின்றது. இதனால் அவர் புகழ் வளர்ந்தோங்கி என்றும் நினைவு கூரத்தக்கதாக விளங்குகின்றது.

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**
**தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி**
**2000 / 2001**

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2000-12-15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவுப்பரீட்சை 2000-12-23 இல் நடைபெறும். முன்னர் விண்ணப்பித்தோர் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அனுமதி அட்டையை 2000-12-20இல் தொழிலாளர் கல்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரத்திற்கு இணைப்பாளர், தொழிலாளர் கல்வி அலகில் தொடர்பு கொள்ளவும்.

(கி-1075) **பதிவாளர்**

---

**வலிகாமம் வடிசாலை**

# சாராயம் விலைஅதிகரிப்பு

வலிகாமம் வடிசாலையில் [நவாலி] உற்பத்தி செய்யப்படும் சாராயங்களின் சில்லறை விலை 01-12-2000 தொடக்கம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**விகர் சாராயம் (750 மி. லீற்றர்) ரூபா 215**
**பனை விசேடம் சாராயம் (750 மி. லீற்றர்) ரூபா 225**
**VSV99 (750 மி லீற்றர்) ரூபா 240**

இவற்றை உத்தரவு பெற்ற சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்**
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ/து)
(பதிவு இலக்கம் யா/மா J/P 2154 -06-11-1993)
மானிப்பாய்.
[கி-1074]

---

**வலிகாமம்தெற்குபிரதேசசபை,சுன்னாகம்**

## 2001 ஆம் ஆண்டுக்கான

# மீள் கேள்வி அறிவித்தல்

2000.11.13 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைய பின்வரும் சந்தை, இறைச்சிக்கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 2001.01.01 ஆம் திகதி தொடக்கம் 2001.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீளவும்கோரப்படுகின்றன.

அட்டவணை

| குத்தகைவிபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1) சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 50000/- |
| 2) கருவாட்டுக்கடை இல. 4 | 60/- | 50/- | 100/- | 6160/- |
| 3) கருவாட்டுக்கடை இல. 6 | 60/- | 50/- | 100/- | 3850/- |
| 4) கருவாட்டுக்கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 3850/- |
| **2. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1) இணுவில்- ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 1500/- | 40000/- |
| **3 ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1) ஏழாலைசந்தை(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | ----- | 250/- | 1000/- | 15000/- |
| 2) ஏழாலை மாட்டிறைச்சிச்கடை | | 150/- | 1500/- | 40000/- |
| 3) சந்தை உட்புறக் கடைகள் இல. 17, 20 (சுன்னாகம்) | 375/- | 200/- | 1000/- | 20000/- |

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி:- 2000. 12. 11 பி. ப. 2. 00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித்திகதி:- 2000. 12· 12 பி. ப. 2. 00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி;- 2000. 12· 12 பி. ப. 3. 00 மணி

ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான தொகை கோரப்படின் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதோடு, கேள்வி வைப்புப் பணத்தையும் இழக்கநேரிடும்.

**க. நவநீதன்**
உபதலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம் (கி-1077)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்

# செய்தித் துளிகள்

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் நாளை மு. ப10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே அங்கத்தவர்களல்லாத வங்கி ஓய்வூதியர்கள், சங்கத்தில் இணையுமுகமாகஇக்கூட்டத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. [உ]

## குடிசைகள் அமைப்பு

[கல்வயல்]

சுதுமலை சின்மயாபாரதி வித்தியாசாலையில் தங்கியிருந்த தென்மராட்சி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் (UNHCR) அனுசரணையுடன் சுதுமலை குருந்தடிப் பிள்ளையார் கோயிலுக்கு அணித்தாக இத் தற்காலிக குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. [ச-111]

## பாணின் விலை அதிகரிப்பு

(மந்திகை)

சட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் 450 கிராம் பாணின் விலை ஒரு ரூபாவால் அதிகரித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளதை அடுத்தே இவ் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனியார் விற்பனை நிலையங்களில் எவ்வித விலை மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-23)

## இலங்கை வங்கியின் புதிய தலைவர்

(கொழும்பு

இலங்கை வங்கியின் புதிய தலைவராக கென் பாலேந்திரா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யோன் கீல்ஸ் நிறுவனத்தின் தலைவ ம், பிரபல தொழில் அதிபருமான கென் பாலேந்திரா இன்று இலங்கை வங்கியின் தலைவர் பதவியை பொறுப்பேற்கிறார். [வ]

## கோப்பாய் பிரதேசசெயலர் அறிவிப்பு

[அச்சுவேலி]

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நேற்று 30 ஆம் திகதி வழங்கப்படவிருந்து, பின் தவிர்க்க முடியாதகாரணத்தினால் வழங்கமுடியாது போன இடம்பெயர்ந்தோருக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவுபற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென, சம்பந்தப்பட்ட மக்களுக்கு கோப்பாய் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். [உ-14]

## அதிபர்கள் செயலமர்வு

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், உப அதிபர்களுக்கான செயலமர்வு நாளை2ம்திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் பயிற்சி மண்டபத்தில் நடைபெற உள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர்எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார். (ச-23)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் 'பாரதி' என்னும் திரைப்படத்தைக் காண்பிக்கவுள்ளது.

நாளை சனிக்கிழமை மு, ப. 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ள மேற்படி வீடியோ படக்காட்சிக்கு ஆர்வமுள்ள எவரும் வருகை தந்து பயன் பெறமுடியும் என இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச)

## உடுவிலில் தேடுதல்

(அரியாலை)

உடுவில் பகுதி அண்மையில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டது. (உ-106)

## வல்லையில் விளையாட்டு அரங்கு

(கல்வயல்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகத்தினால் வல்லையில் விளையாட்டரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் பொது விளையாட்டரங்குகள் இல்லை; எனவே இம் முயற்சி இப்பகுதி விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். (ச-111)

## ஊனமுற்றோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஊனமுற்றோர் தினவிழா வரும் ஞாயிற்றுக்கிழமை மேற்படி சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் க. கனகரட்ணம் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாண யுனிசெப் திட்டமிடல் அலுவலர் சாள்ஸ் ஸ்ரிக்லன்ட் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்து திருடப்பட்டதாக கருதப்படும் 30 இலட்சரூபா பெறுமதியான பொருட்களை பம்பலப்பிட்டி பொலிஸார் அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலம் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைதான பொரளை வாசி ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

35 வீடுகளில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டிருப்பதாய்தெரிய வந்துள்ளது. (உ)

## சங்காபிஷேகம்

[புலோலி]

உடுப்பிட்டி அருள்மிகு பகவதி அம்மன் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

ஆலய பிரதம குரு. சிவஸ்ரீசாமி கனகசபாபதிக்குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ. க. கேதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ செ. சிவானந்தக்குருக்கள் ஆகியோர் சங்காபிஷேகத்தை நடத்திவைக்கவுள்ளனர். [ச-52]

# திருநெல்வேலி சந்தைப்பகுதியில் உற்பத்தி பொருட்களிற்கான கழிவுமுறை தொடர்ந்தும் அமுலில்

## நல்லூர் பிரதேசசபை தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களிற்கென பின்பற்றப்பட்டு வந்த கழிவுமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் விவசாயிகள், வியாபாரிகள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணி பல்லவராஜன் (நிஷாந்தன்) தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

ஈ. பி. டி. பி. தலைமையகத்தில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில், பிரதேச சபை செயலாளர் செ. செல்வரெத்தினம், கமநல சேவை திணைக்கள ஆணையாளர் எஸ். சுந்தரேசன் உட்பட விவசாய சம்மேளன பிரதிநிதிகளும், பிரதேசசபை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கழிவுதொடர்பாக விவசாயிகள் முறைப்பாடுகள் ஏதுமிருந்தால் உடன் தமக்கு அறிவிக்கவேண்டுமென பிரதேச சபைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

இதற்காக நல்லூர் பிரதேச சபையில் ஒரு முறைப்பாட்டுப் பெட்டி வைப்பதென தீர்மானிக்கப்பட்டது. (க-3)

## கரவெட்டியில் சீரற்றமதகு பயணிகள் சிரமம்

(கல்வயல்)

கரவெட்டி மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலமைந்துள்ள மதகின் ஒருபகுதி உடைந்து வீழ்ந்துள்ளது.

இதனால் நீர்ப்பாய்ச்சல் தடைப்பட்டுள்ளதுடன், முழு மதகுமே உடைந்து விழும் நிலையேற்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விடம், பயணங்கள் மேற்கொள்வதற்கு உகந்ததாய் காணப்படாததுடன், விபத்துக்கள் நிகழக்கூடிய அபாயமும் ஏற்பட்டிருப்பதாய் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், மேற்படி மதகு ஒரு மாதத்திற்கு மேலாக இதே நிலையில் காணப்படுகின்ற போதிலும், இவ்விடத்தில் அபாய அறிவிப்பு பலகையோ அன்றி சிவப்பு நிறக்கொடியையோ நாட்டி பொதுமக்களுக்கான எச்சரிக்கை உணர்வை அளிக்க, பெருந்தெருக்கள் திணைக்களம் தவறிவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-11)

## இராசி பலன்

1-12-2000
(கார்த்திகை 16, வெள்ளி)
பஞ்சமி பி.ப 1.32 வரை
திருவோணம் வை.5.24வரை
ராகுகாலம் 10.45- 12.15
சுபநேரம் 6.15- 7.45

**மேடம்**
பணியாள் உதவி, இலட்சுமீகரம், தொழில் மேன்மை, காரிய ஜெயம்.

**இடபம்**
உடல் உபாதை, கட்டுப்படுதல், பிரயாணம், மன அமைதியின்மை.

**மிதுனம்**
கௌரவக்குறைவு, கொடுக்கல் வாங்கல் பிணக்கு, வியாதி, எதிர்பாராதஅச்சம்.

**கடகம்**
போசன சுகம், சுவாரஸ்யம், தனவரவு, வாகன வசதி.

**சிங்கம்**
புதிய தொழில் முயற்சி, பகைவர் விலகுவர், சந்தோசமான செய்தி, நோய்குணமடைதல்.

**கன்னி**
காரிய நன்மை, பயந்த சுபாவம், நிலைக்கேடு, தாழ்வு நிலை, பிரயாண தாமதம்.

**துலாம்**
மனக்கவலை, கல்விச் சிறப்பு, பணச் செலவு, தன்னம்பிக்கைக்குறைவு.

**விருச்சிகம்**
பிரயாணம், தனவரவு, காரிய ஜெயம், உஷ்ண வியாதி.

**தனுசு**
வாக்கினால் பகை, தன விரயம், காரியத் தாமதம், மதிப்புக் குறைவு.

**மகரம்**
தெய்வ சிந்தை, உடல் நலம், நல்ல உணவு கிடைத்தல், சயன சுகம்.

**கும்பம்**
பிரயாணம், நித்திரைக் குறைவு, காரிய அலைச்சல், உணர்ச்சி வசப்படல்.

**மீனம்**
நிலைமாற்றம், நண்பர்கள் உதவி, கௌரவம், குதூகலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வானவன்

## கொடிகாமத்திற்கு மீண்டும் மின் விநியோகம் துரித கதியில் ஏற்பாடுகள்

(கல்வயல்)

கொடிகாமப் பகுதி வழமை நிலைக்கு திரும்புவதையடுத்து, அங்கு மீண்டும் மின் விநியோகம் ஏற்படுத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுன்னாகம் பிரதேச அலுவலகத்தில் இருந்த பாரிய மின்பிறப்பாக்கி ஒன்று கொடிகாமம் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதுடன், இணைப்பு வேலைகளும் நடைபெற்று வருவதை காணக்கூடியதாய் உள்ளது.

இதேசமயம், கொடிகாமப் பகுதியில் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் பொதுமக்கள் இடம்பெயர்ந்தும், இதனையடுத்து அங்கு செயற்பட்டு வந்த மின்பிறப்பாக்கியை வேறு இடத்திற்கு மாற்றியதும் குறிப்பிடத்தக்கது. (உ-111)

## நகைகளை உரிமை கோருவதற்கான திகதிடிசம்பர் 9வரை நீடிப்பு யாழ். அரசஅதிபர்தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

1995 ஆம் ஆண்டு 'ரிவிரச' இராணுவநடவடிக்கையின் போது கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணங்கள், பிஸ்கட்டுகள்தகடுகள் என்பனவற்றை உரிமை கோருவதற்கான திகதி டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உரிமை கோரும் மேற்படி பொருட்களின் எழுத்துஅடையாளங்கள், வேலைப்பாடுகள், மாதிரி அமைப்பு மற்றும் நிறை ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுத்துமூலம் குறித்த திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த விபரங்களின் அடிப்படையில் நகைகள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவற்றைக் கையளிக்கும் போது பத்திரிகை வாயிலாகப்பொதுமக்களுக்கு அறியத்தரப்படும் என மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தங்க ஆபரணங்கள் செப்டெம்பர் 25 ஆம் திகதி பலாலி இராணுவ முகாமில் வைத்து அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டமை தெரிந்ததே. (ச)

## திருடர்குழு தப்பியோட்டம் வாகனச் சாரதி கைது சுண்டுக்குளியில் சம்பவம்

(சுண்டுக்குளி)

பழைய பூங்கா வீதியிலமைந்துள்ள ஆட்களற்ற வீட்டில் திருடிச் செல்லப்பட்ட கதவுகள், சுண்டுக்குளி சந்தி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம், பிற்பகல் வேளையில், மேற்படி திருடப்பட்ட 35 ஆயிரம் ரூபா பெறுமதியான கதவுகளை வாகனம் ஒன்றில் திருடர் குழு ஏற்றி வந்தனர்.

இதனை முன்கூட்டியே தெரிந்து கொண்ட பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்ற போது கள்வர் குழு தப்பியோடிவிட்டது.

இதனால் ஏதுமறியாத அப்பாவியான வாகனச் சாரதியையும் அவரது வாகனத்தையும், களவுப் பொருட்களையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (உ-59-108)

## பிரிவுபசார நிகழ்வு

பலாலி ஆசிரியர்கலாசாலை இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார விழா இன்று காலை 9.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை பிரதான மண்டபத்தில் சி. ஸ்ரீரங்கநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலாசாலை அதிபர் கு. சதாசிவமூர்த்தி கலந்து கொள்கிறார். [ச-39]

# பொது அறிவு வினாக்கள்

## இல. 33 தொகுப்பு: யூட்

### பின்வரும் நாடுகளின் தலைநகரங்கள் எவை?

01) ஆப்கானிஸ்தான்
02) ஆர்ஜென்ரீனா
03) பெல்ஜியம்
04) பல்கேரியா
05) ஈக்குவடோர்

### பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

06) எத்தியோப்பியா
07) பிறேசில்
08) கானா
09) ஈரான்
10) நெதர்லாந்து
11) மனித உடலின் எந்தப் பகுதி அதிக நொதியத்தைச் சுரக்கிறது?
12) விண்வெளியில் பயணம் செய்த முதல் மனிதன் யார்?
13) ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் எத்தனையாம் ஆண்டு இறந்ததாகச் சொல்லப்படுகிறது?
14) நைல் நதியின் நன்கொடை என வர்ணிக்கப்படும் நாடு எது?
15) உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகம் எது?
16) பனிக்கட்டி உற்பத்தியில் பயன்படும் வாயு எது?
17) உலகின் முதல் தீப்பெட்டி எத்தனையாம் ஆண்டு யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
18) ஸ்பெயின் நாட்டின் தேசிய சின்னம் எது?
19) உலகில் அதிகளவில் விற்பனையாகும் நூல் எது?
20) ஹொங்ஹொங் எத்தனையாம் ஆண்டு சீனாவிடம் கையளிக்கப்பட்டது?
21) இங்கிலாந்தின் தேசியப் பறவை எது?
22) கிரிக்கெட் ஆட்டத்தில் சதம் அடித்த முதல் வீரர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
23) 1924 ல் ஒலிம்பிக் போட்டி எங்கு இடம் பெற்றது?
24) முதல் உலகக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டி எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது?
25) இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக் கழகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
26) தந்தி மூலம் வரும் செய்திகளை அச்சுப் பதித்துத் தரும் கருவி யாது?
27) இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள பிரதேசம் எது?
28) பறக்கும் விமானத்தின் வேகத்தை அளக்கப் பயன்படும் கருவி எப்பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது?
29) ஐக்கிய அமெரிக்கா எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
30) தாமரைப் பூ சர்வதேச நாடுகளில் எதனைக் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது?
31) 1993 ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர் யார்?
32) சர்வதேச உழைப்பாளர்கள் நிறுவனத்தின் தலைமையகம் எங்குள்ளது?
33) இலங்கையின் பாடசாலைகளை எத்தனையாம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது?
34) ஹொக்கி விளையாட்டுக்கான உலகக் கோப்பையை இந்தியா எத்தனையாம் ஆண்டு தட்டிக்கொண்டது?
35) சீனக் குடியரசின் முதல் ஜனாதிபதி யார்?
36) இந்தோனேசிய நாட்டின் பாராளுமன்றம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
37) இசைத்தட்டு (நீண்ட நேரம் பாடக்கூடியது) யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
38) உலகில் மிக உயரத்தில் அமைந்துள்ள ஏரியின் பெயர் என்ன?
39) இறந்த கடல் என அழைக்கப்படும் கடற்பிரதேசம் எங்குள்ளது?
40) பூமியின் மொத்த நில மேற்பரப்பு எவ்வளவு?

**குறிப்பு:-**
இதற்கான விடைகள் 07-12-2000ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்

## அறிவியல் பகுதி
## வினா இல: 33

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..............................

சொந்த முகவரி; ..............................

கற்கும் பாடசாலை ; ..............................

மாணவர் கையொப்பம்; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கணிதம் பகுதி - 1

(மல்லாகம் ம. வி.)

நேரம் : 1 மணி

தொகுப்பு: யாழ். சி. டி. பல்குணன்லாலா

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01. 240 இன் முதன்மைக் காரணித் தொடை A எனின்
(அ) தொடை A இனை மூலகங்களுடன் தருக?
(ஆ) n(A) யாது?

02. சுருக்குக: $\dfrac{1000-0.98}{100-0.098}$

03. தீர்க்க: $\dfrac{C}{3} - \dfrac{C-2}{4} = \dfrac{4}{3}$

04. $\text{மட}_x\, 3 = m$, $\text{மட}_x\, 5 = n$ ஆயின் $\text{மட}_x\, 15$ இன் பெறுமதியை m, n இல் காண்க?

05. வருடம் 48% எளிய வட்டிப்படி ரூ. 2 இற்கு 1 மாத வட்டி எவ்வளவு?

06. 12 பேர் ஒரு வேலையை 9 நாட்களில் செய்து முடிப்பர் அவ்வேலையின் இருமடங்கு வேலையை 24 பேர் எத்தனை நாட்களில் முடிப்பர்?

07. $4\frac{1}{2}$, $3\frac{1}{2}$ என்பவற்றை மூலகங்களாகவுடைய இருபடிச் சமன்பாட்டை x இல் எழுதி அடைப்பின்றித் தருக?

08. 0.3L தேங்காய் நெய்யின் விலை ரூ. 12.00 எனின் $\frac{3}{4}$ L தேங்காய் நெய்யின் விலை என்ன?

09. $at = pa + Cm$ இல் a ஐ எழுவாயாக்குக?

10. ஓர் ஒழுங்கான பல்கோணியின் ஓர் அகக்கோணம் ஒரு புறக்கோணத்தைப் போல 7 மடங்கானது. பல்கோணியின் பக்கங்கள் எத்தனை?

11. A, B, C ஆகியோருக்கு 4:7:5 என்ற விகிதப்படி ரூ. 480 ஐப் பங்கிட்டால் A பெறுவதன் எத்தனை மடங்கினை Bயும், Cயும் சேர்ந்து பெறுவர்?

12. 600m நீளமான பாலமொன்றை 200m நீளமான புகைவண்டி 10 செக்கனில் கடந்தால் வண்டியின் கதியை மணிக்கு எத்தனை கிலோ மீற்றர் எனக் காண்க?

13. $\dfrac{y}{5} = \dfrac{x}{3} - 1$ என்ற நேர் கோட்டின்
(அ) படித்திறன் யாது?
(ஆ) வெட்டுத்துண்டு யாது?

14. ஒரு பொருளை ரூ. 264 இற்கு விற்ற போது 12% நட்டம் அடைந்தவன் 5% இலாபம் அடைய வேண்டுமாயின் என்ன விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்.

15. △ ABC இல் $\hat{B}$ $\hat{C}$ என்பவற்றின் இருகூறாக்கிகள் O இற் சந்திக்கின்றன. $B\hat{O}C = 140$ பாகை எனின் $B\hat{A}C$ இன் அளவு யாது?

## பொது அறிவு வினா இல-32 விடைகள்

1) ஹனோ
2) பெல்கிரேட்
3) ஹாரேரி
4) டமாஸ்கஸ்
5) டார் - எஸ் – சலம்
6) சில்லிங்
7) லீரா
8) பேசீடா
9) சிரோன்
10) கினா
11) ஜார்க்கண்ட்
12) 1946-ல்
13) மெலனின்
14) 1812-ல்
15) நடுவிரலில்
16) ஹைட் ரோபோண்
17) ஒஸ்கார் விருது
18) நெதர்லாந்தின் ஹேக் நகரில்
19) சப்பு கஸ்கந்த
20) இலண்டன்
21) 984 அடி
22) 1900 ஹேரேஸ் சார்ட்
23) அந்தோனியா மியூக்சி 1849-ல் (1876 இலே யேகிர ஹாம் பெல் உருவாக்கினார்)
24) பின்லாந்து
25) சகாரா, 32 50000 சதுர மைல்கள்
26) கி.மு 488-ல்
27) 9.46 இலட்சம் கோடி கி. மீ
28) வில்லியம் (1930ல்)
29) ரிச்பேர்/மெர்கல்லி
30) 165384 சதுரகிலோ மீட்டர்
31) துன்பம்
32) சுப்ரீம் சோவியத்
33) யூகோஸ் லாவியா
34) Cable News Network
35) 10650
36) 1931-ல்
37) Research & Analyse Wing
38) 1958-ல்
39) தாய்வான்
40) Mrs. சீடம்சி.ஹோம்ஸ்

## பொது அறிவு வினா இல-32

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ பா. இந்திராதேவி, யாழ்ப்பாணம்.
★ செ. ஜெரீன் நிரோஷன், வட்டுக்கோட்டை:
★ ச. ஹபிலன், வட்டுக்கோட்டை.
★ த. கயல்விழி, காரைநகர்.
★ து. கிரிஜா, சித்தங்கேணி.
★ சி. சயந்தன், வட்டுக்கோட்டை,
★ து. துஷ்யந்தினி, கல்வியங்காடு.
★ உ. அனித்தா, உரும்பிராய்.
★ அ. கிருஷாந்தி, நெல்லியடி.
★ சி. காயத்திரி, நல்லூர்.
★ ஜெ. சங்கீதா, கோண்டாவில்.
★ த. வைஷ்ணவி, தாவடி.
★ ந. றமணன், ஊர்காவற்றுறை.
★ தி. தாட்சாயணி, நல்லூர்.

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தால் நடத்தப்பெற்ற பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா, 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.30 மணிக்கு வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகவலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இப்பரிசளிப்பு வைபவத்தில் யாழ்ப்பாண மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு, இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சண்முகநாதன், பொ. அருணகிரிநாதன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

### ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா, நாளை சனிக்கிழமை மு. ப 9. 30 மணிக்கு பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கத்தோலிக்க மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட் திரு க. அருள்நேசன் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராஜாவும் கலந்து கொள்கின்றனர். (உ)

## இன்று ஒரு தகவல்

# புத்தகம் எழுதுவது எப்படி?

டெட்ஸுஜென் என்பவர் புத்தபகவானின் நூல்களை மொழிபெயர்த்து ஜப்பானிய மொழியில் வெளியிட்டுப் பாமர மக்களும் அறியும்வண்ணம் செய்ய ஆவல் கொண்டார். அதற்குப்பணம் நிறைய வேண்டியிருக்கும் என்று உணர்ந்துகொண்டார். அதற்கெனப் பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டினார். பத்து வருடங்கள் முயன்று திரட்டி தன் லட்சியத் தொகையை அவர் சேகரித்தார்.

தன் புத்தகத்தை அச்சிட அவர் துவங்கும் போதுயோகி நதியில் ஒரு பெரு வெள்ளம் வந்து. அக்கம் பக்கத்து மக்கள் வீடுகளை அழித்து விட்டது. டெட்ஸுஜென் தன் நிதி முழுவதையும் நிவாரணப்பணிக்கு நன்கொடையாக அளித்துவிட்டார். இருப்பினும் தன் மூல லட்சியத்தை அவர் மறக்கவில்லை. இருமடங்கு உற்சாகத்துடன் அவர் நன்கொடை திரட்டும்பணியைத்தொடர்ந்தார்.

இன்னும் பத்து வருடத்தில் லட்சியத் தொகையை சேகரித்து முடித்தார். இந்தத் தடவை அவருடைய ஊரில் வந்த கொள்ளை நோய் நிவாரணப்பணி அவர் சேகரித்து வைத்த பெருநிதியை விழுங்கி விட்டது.

ஆனால் டெட்ஸுஜென் இரும்பினால் செய்த தசை கொண்டவர்போலும். மூன்றாம் முறை தன் புத்தபகவான் பற்றிய புத்தக நிதியைத் திரட்டத்துவங்கினார். இந்தத் தடவை அவர் நிதி திரட்டப் பத்தாண்டுகளுக்கு மேல் பிடித்தது. கடைசியாக புத்தரின் உபதேசங்கள் ஜப்பானிய மக்கட்குத் தம் தாய் மொழியிலேயே கிடைத்தன. முதல் இரண்டு பதிப்புக்களும் புத்தரின் உபதேசங்களை நடைமுறையில் காட்டியதால். மக்கள் அந் நூலை ''மூன்றாவது பதிப்பு'' என்றழைத்தனர்.

நன்றி
விவேகவாணி

## வவுனியாவில்
# சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை

(வவுனியா நிருபர்)

போலியோசொட்டு மருந்து விநியோகம் இரண்டாவது முறையாக நாளை சனிக்கிழமை வவுனியா மாவட்டத்தில் 120 நிலையங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளது.

ஐந்து வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளும் இந்த இரண்டாவது முறையாக வழங்கப்படும் சொட்டு மருந்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

கடந்த முறை வவுனியா மாவட்டத்தில் 16 ஆயிரம் குழந்தைகள் இந்த மருந்தினைப் பெற்றுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் போலியோ மருந்து வழங்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. (வ)

## யாழ். குடாநாட்டு
# அபிவிருத்தி முயற்சிகள் வெளிநாட்டவர் முனைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பாக வெளிநாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் சிலர் முனைப்புடன் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக மேற்படி நிறுவன பிரதிநிதிகள் யாழ். அரச அதிபர் சண்முகநாதனுடன் முன்னோடிப் பேச்சுக்களை நடத்தி உள்ளனர். உளவள நிலையமாக 'சாந்தியகம்' நிலைய செயற்பாடுகளை விஸ்தரித்தல் தொடர்பான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது.

'சேவலங்கா' என்ற பெயரைக்கொண்ட இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்த மேலதிக தகவல்கள் விரைவில் வெளியிடப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## க.பொ.த. (சா.த) பரீட்சை
# அனுமதி அட்டை குளறுபடி மாணவர் திண்டாட்டம்

(மந்திகை)

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்க்கான அனுமதி அட்டைகளில் பல குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாகதெரிய வந்துள்ளது.

இந்தவகையில் முழுப்பெயர் மாற்றமடைந்தும், ஆண்பிள்ளைகளுடைய பெயர்களின்இறுதிஎழுத்து மறைந்து பெண்களின் பெயர்போல் காணப்படுவதாகவும், இன்னும், சில அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்டவரின் விலாசம் மட்டும் இடப்பட்டு பெயர் இன்றி வந்து சேர்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் மாணவர் பலர் பரீட்சையை எதிர்கொள்வதில்பலத்தசிக்கல்களைஎதிர்நோக்கியிருப்பதாகவும், இவர்களின் இடர்களைந்து இயல்பான நிலையில் பரீட்சைஎழுத கல்வித் திணைக்கள வட்டாரம் ஏற்ற நடவடிக்கைகளை நேரகாலத்துடன் முன்னெடுக்க வேண்டும் எனவும் மாணவர்களின் பெற்றோர் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-23)

### கும்பாபிஷேகம்

[கல்வயல்]

பருத்தித்துறை பண்ணைக் கட்டை ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக விழா எதிர்வரும் 8 ஆம்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இணுவில் தர்மஸாஸ்தா குருகுலத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ தாணுமகாதேவக்குருக்களின் ஆசியுடன் சிவஸ்ரீ தாணுவாசுதேவக் குருக்கள் பிரதம பிரதிஷ்ட குருவாக அமர்ந்து பிரதிஷ்ட அபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ச-111)

# பெருமளவு விவசாய குடும்பங்கள் இடம்பெயர்வால் பாதிப்புற்றன

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இடம்பெற்ற இடம்பெயர்வினைத் தொடர்ந்து 14 ஆயிரத்து 682 விவசாயக் குடும்பங்கள் பெரும் பாதிப்பினை கடந்த ஆறுமாத காலமாக எதிர்நோக்கிவருகின்றன.

இக் குடும்பங்கள் முற்று முழுதாக விவசாயச் செயல்பாடுகளின் வருமானத்திலேயே தங்கியிருந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த மே மாதம் இக்குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறியது முதல் இன்றுவரை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

அத்துடன் இக் குடும்பங்களினால் பேணி வளர்க்கப்பட்ட ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகள்கூட கைவிடப்பட்ட நிலைகளிலேயே வடமராட்சி, வலிகாமப் பகுதிகளில் தஞ்சம் அடைந்தனர். அதன் பொருட்டு கைவிடப்பட்ட கால்நடைகளுக்குஎன்ன நடந்தது என்பது கூடத் தெரியாத நிலையில்தான் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

வளர்க்கப்பட்ட கால்நடைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களைத் தமது சொந்த இடங்களில் கைவிடப்பட்டு வந்து விட்டதால், மொத்தமாகப் பல லட்சம்ரூபா இத்தகைய விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டமாகக் கருதப்படுகின்றது. (க-77)

### 13 தமிழ் இளைஞர் கைது

(மாத்தளை)

மாத்தளை ரத்தோட்ட பகுதியில் 13 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்தஇளைஞர்கள்பொலிஸாரின் தீவிர புலன்விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### மலையகத்தில் புதிய அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழி மக்களின் வாழ்கையை வளம்படுத்தவும் ஐக்கியத்தைப்பேணவும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி என்ற புதியதொரு தொழிற் சங்கம் நாளை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளதாக முன்னணியின் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்றஉறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்களான உப தலைவர்கள் ஐந்து பேரும் இணைந்து இதனை உருவாக்கியுள்ளனர். (க)

### தையல் பயிற்சி

(புலோலி)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் தையல் பயிற்சி வகுப்பொன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத் தையல் பயிற்சி வகுப்பில் வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கான தையல், மனையியல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜா தெரிவித்தார்.

அத்துடன் இத் தையல் பயிற்சி வகுப்புக்களில் பயிற்சி பெறவிரும்பும் யுவதிகள் பருத்தித்துறை பிரதேச செயலரூடாக விண்ணப்பங்களை அனுப்புமாறு அவர் தெரிவித்துள்ளார். (உ-52)

### சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த மூன்று மாத காலமாக இடம்பெற்று வந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 2இன் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை சனிக்கிழமை 02-12-2000 பி.ப 2-00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மேற்படி அடிப்படைக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவார். (ச)

# மத்திய மருந்தகத்தில் நோயாளர் அதிகரிப்பு

[கல்வயல்]

கோண்டாவில் மத்திய மருந்தகத்தின் வெளிநோயாளர் பிரிவில் அதிக எண்ணிக்கையான நோயாளர் கூட்டம் நிரம்பி வழிகிறது.

மிகக் குறைந்த ஊழியர்களைக் கொண்டுள்ள மருந்தகத்தின்நிர்வாகம் இதனால் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

எனினும் நிர்வாகத்தினரின் பகீரதப் பிரயத்தனத்தினால் அனைவருக்கும்சிகிச்சைஅளிக்கப்பட்டுவருவது குறித்து பொதுமக்கள் தரப்பிலிருந்து மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது. [ச-111]

### பாராட்டு விழா

நாகம்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரான நன்னித்தம்பி இராஜரட்ணம் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையை முன்னிட்டு பாராட்டு விழா வொன்று வரும் ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு அறிஞர் ஐயன்னா ச.ச.நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ)

# திருக்குறள் மாநாடு கொழும்பில் இடம்பெறும்

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் திருக்குறள் மாநாடு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவர் பேராசிரியர்சோ. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் அறிஞர் பெருமக்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்குவெள்ளவத்தை காலி வீதி உருத்திரா மாவத்தை சந்தியில் இருந்து மங்கள இசையுடன் திருவள்ளுவர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அரங்கில் முதல் நாள் நிகழ்வுகள் இடம் பெறும்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்துணைவேந்தர்செ.மூக்கையா, பண்டிதர் க. உமா மகேஸ்வரன்பேராதனைப்பல் கலைக்கழக விரிவுரையாளர் வி.மகேஸ்வரன் உட்பட பலர் பங்கு பற்றுவர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் பேராசிரியர் எம்.எம். உவைஸ் அரங்கில் இடம் பெறும். அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் உட்பட பிரமுகர்பலர்கலந்து கொள்ள உள்ளனர்.

# இனம் தெரியாதோரால் இருவர் அடித்துக்கொலை

(மட்டக்களப்பு)

ஹபறணை கதிரஸ் கொட்டுவ காட்டுப் பாதையில் இருவர் இனந்தெரியாதோரால் அடித்துக் கொலை செய்யப் பட்டுள்ளனர்.

இப்பரிதாபச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அன்று இடம் பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்ட கிண்ணியாப் பிரதேசத்தைச் சேர்ந்த என். எம். முஹமட்ரபீக், முகமட் சுபைதா உம்மா என அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகமட் சுபைதா உம்மா வெளிநாட்டிலிருந்து வந்ததற்கான ஆதாரங்களும், ரபீக் வழித்துணையாக அவரை அழைத்து வந்திருக்கலாம் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச-60)

# மட்டக்களப்பில் எய்ட்ஸ் எதிர்ப்பு நிகழ்வுகள்

(மட்டக்களப்பு)

உலக எய்ட்ஸ் தினமான இன்று முதலாம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் 'எய்ட்ஸ்' தொடர்பான பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சுதந்திர மனித அபிவிருத்திக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் எய்ட்ஸ் எதிர்ப்புத் துண்டுப் பிரசுர விநியோகம், கருத்தரங்கு, ஒன்றுகூடல் மற்றும் ஊர்வலம் என்பன இடம் பெறவுள்ளதாக கழகத்தின் ஸ்தாபகர் எஸ். சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பிரதேசசெயலர் பிரிவுகளையும் சேர்ந்த இளைஞர், யுவதிகளிடையே எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு, எய்ட்ஸால் ஏற்படும் மரணம் பற்றிய துண்டுப் பிரசுர விநியோகம் மற்றும் இருபாலாருக்குமான ஒன்றுகூடல் நிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-60

# கருணைக் கொலை மசோதா

# நெதர்லாந்தில் நிறைவேறியது

(அமஸ்ரடாம்)

கருணைக் கொலையை, அங்கீகரிக்கும் மசோதா நெதர்லாந்து நாடாளுமன்றில் நிறைவேறியது.

உலகிலே நெதர்லாந்து நாட்டில்தான் இப்படியான மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுறது.

நாடாளுமன்றத்தில் இம் மசோதாவிற்கு சாதகமாக நூற்றிநான்கு வாக்குகளும் பாதகமாக நற்பது வாக்குகளும் கிடைத்து நிறைவேறியுள்ளது.

இந்த மசோதா செனற் சபையில் நிறைவேறியது சட்டமாகும்.

இந்தச்சட்டத்தினால் தீர்க்கமுடியாத நோயால் அவதியுறும் நோயாளியை இந்தச் சட்டத்தின்படி டாக்டர் இறக்கச் செய்யலாம்.

இருந்தும் பிரயோசனமில்லை என்றநிலையில்அழுந்தும் நோயாளிகளை இறக்கச் செய்வதற்கு வழி செய்கின்றது.

# அதிபர் மாளிகை முன்பாக 20 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம்

## இரவு நேரத்தில் இடம்பெற்றதாம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடாவின் மாளிகைமுன் இருபதினாயிரம் பேர் விழித்திருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதிபர்எஸ்ராடாவை பதவி விலகும்படி கோரி அதிபர் மாளிகையைச் சுற்றி இரவிரவாக கண்விழித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சூதாட்டக்காரரிடம் இலஞ்சமாகப் பல கோடிருபாவை அதிபர் எஸ்ராடாபெற்றதாக ஏற்கனவே செனட் சபையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதையடுத்தேஇரவு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்ட முடிவில் பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடாவின் கொடும்பாவியை ஆர்ப்பாட்டக் காரர் எரித்தனர்.

இதேவேளை பிலிப்பைன்ஸ் றோமன்கத்தோலிக்க பிரதமகுரு நாட்டிலுள்ள சகல கிறிஸ்தவர்களையும் டிசெம்பர் மாதம் ஏழாந்திகதி இரவு கண்விழித்து நாட்டின் விடுதலைக்காக வேண்டும்படி கேட்டுக் கொண்டார். (து)

உலக தரிசனம்

**தமிழக முதல்வருக்கு**

# நடிகர் ராஜ்குமாரின் மகன்மார் நன்றி தெரிவித்தனர்

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பனின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரின்மகன் மார் மூவரும் தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்தனர்.

தந்தையை வீரப்பனிடமிருந்து விடுவிப்பதற்கு உதவிய முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்த மூன்று மகன்மாரும் தமிழ்நாடு அரசுக்கும் முதல்வருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அதன் பின் தமிழர் தேசிய கட்சிப் பிரமுகர் பழநெடுமாறனையும் சந்தித்து கர்நாடக அரசின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதையடுத்து பத்திரிகையாளர்களைச்சந்தித்தபோது சந்தனக் கடத்தல் வீரப்பனை தமிழக அரசும் கர்நாடக அரசும் பிடிப்பதற்கு முயற்சிப்பது பற்றிக் கேட்டபோது மூவரும் பதில்சொல்ல மறுத்து விட்டனர். (து)

# புதுச்சேரியில் தொடரும் புயல் மக்கள் பெருமளவில் வெளியேற்றம்

(புதுவை)

புதுச்சேரியில் தொடரும் புயற்காற்றுமழையால்பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடன் காற்று வீசியதால் புதுச்சேரியில் பலநூறு குடிசைகள், சேதமாகியுள்ளன என்றும் பன்னிரண்டு பேருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கின்றனஎன்று தெரிவிக்கப்படுகிறது

வீதிகளில் மரங்கள் விழுந்துள்ளதாகவும் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரையோரப்பகுதிகளில் இருந்த மக்களெல்லாம் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது பலத்த புயற்காற்று வீசும் என்ற அச்சத்தால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதுடன் எந்த நேரமும் இராணுவமும் மற்றும் ஸ்தாபனங்களும் தயார் நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது. (து)

**மாருதி கார் தொழிற்சாலை**

# வேலை நிறுத்தம் தொடர்கிறது மக்களவை உறுப்பினர் வெளிநடப்பு

[புதுடில்லி]

மாருதிக்கார்தொழிற்சாலையின் வேலை நிறுத்தத்தில் அரசு தலையிடவில்லைஎன்று கூறி மக்களவையிலிருந்து இடதுசாரிக் கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

தொழிற்சாலையில் ஊழியர்களுக்குரிய சில சலுகைதளைக்கேட்டு வேலை நிறுத்எம் செய்ய முற்பட்டார்கள் கன்றுநாற்பத்திநான்குபேரை அந்நிறுவனம் இடைநிறுத்தம் செய்தது.

இதனைத் தொடர்ந்தே தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகவே மக்களவையில் இடதுசாரிக்கட்சி அங்கத்தவர்கள் வெளி நடப்புச் செய்தனர்.

இச் சமயத்தில் கனரக தொழில் மந்திரி மனோகர் ஜோஸி குறிப்பிடுகையில்; நாலாயிரத்து ஐந்நூறு பேர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதாகவும் தொழிற்சாலையின் நிர்வாகத்தின் வேண்டுகோளை அனுசரித்து ஆயிரத்து ஐந்நூறு பேர் வேலைக்குத் திரும்பிவிட்டனரென்றும் குறிப்பிட்டார். (து)

**வாகன நெரிசலை தவிர்க்க**

# சைக்கிளிற்கு தனிவழி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் சைக்கிள்பாதைகள் அமைக்கும் திட்டம் உருவாகியுள்ளது.

வாகனங்களில் செல்வதற்கு ஒரு பாதையும் மனிதர்கள் நடந்து செல்ல ஒருபாதையும் இருப்பது போல் சைக்கிளுக்கும் பாதை அமைக்கும் திட்டம் உருவாகியுள்ளது.

வீண் விபத்துக்களைத் தடுக்கவும் வீதிப்போக்குவரத்தைச் சீர் செய்யவும் உதவும் வகையில் சைக்கிள் பாதைத்திட்டத்தை நகரப்பகுதிகளில் அறிமுகப்படுத்த இருக்கிறது.

இதனால் நெரிசல் மிகுந்த நகர்ப்பகுதியில் போக்குவரத்துக்கள் சுலபமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

**தமிழக மீனவர்**

# சுட்டுக் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும்

## கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் பிறநாட்டுப் படைகளால் சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு கடிதமொன்று எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுவதாவது; தமிழக மீனவர்கள் கச்சதீவுக்களுகே இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டதாகவும் அதில் ஒருவர் இறந்ததாகவும் தெரிவித்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதை தடுக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் தற்செயலாக இலங்கை எல்லைக்குள் திசை தெரியாது மீன் பிடிக்கச் சென்றாலும் அவர்களை சுடாது சிறைபிடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வழி செய்யும்படி கேட்டுக் கொண்டார். (து)

# காந்தி சமாதான விருது இம்முறைமண்டேலாவிற்கு

(புதுடில்லி)

காந்தி சமாதான விருது இம்முறை தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா விற்கும் பங்களாதேஷ் கிராமிய வங்கிக்கும் கிடைத்திருக்கிறது.

இந்திய அரசு வருடா வருடம் சமாதானத்துக்காகச் சேவை செய்யும் உலகத் தனி நபருக்கோ ஸ்தாபனத்துக்கோ இந்தவிருதைவழங்கி வருகிறது.

இவ்வாண்டு எழுபதுக்கு மேற்பட்ட தனி நபர்களும் ஸ்தாபனங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் இந்தியாவின் கலாசார அதிகாரி ஆனந்தகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி ரூபா பரிசாகக் கொடுக்கப்படுவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (து)

# ஆறுவயதுச்சீனச் சிறுவன் கின்னர்ஸில் பெயர் பதிப்பு

(பீஜிங்)

சீனாவின் யூகோ இனத்தைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் கின்னர்ஸ் புத்தகத்தில் இடம் பெற்று விட்டான்.

அட்டா முச்சான் என்ற இந்த ஆறு வயதுச் சிறுவன் புகைப்படங்கள் கொண்ட கார் கார்சியை நடத்தியதின் பேரில் கின்னர்ஸ் புத்தகத்தில் இடம்பெற்று விட்டான்.

தான் படிக்கும் பாடசாலையில் தான் எடுத்துப் பிரசித்தி பெற்ற நூற்றுக் கணக்கான படங்களையே இந்தக் கண் காட்சியில் வைத்திருந்தான்.

தந்தை கொடுத்த கமராவைக் கொண்டே அட்டா முச்சான் இவ்வளவு படங்கள் எடுத்ததாகவும் அவைகள் பல சீனப் பத்திரிகையில் வெளிவந்து பாராட்டுக்களைப் பெற்றுக் கொடுத்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. (து)


## விலை கோரல்

2000.12.11ஆந் திகதி முதல் 22ஆந் திகதி வரை நடைபெற உள்ள க. பொ. த (சா/த) பரீட்சை ஆவணங்களை இணைப்பு நிலையங்களுக்கு ஏற்றி இறக்குவதற்கு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

இச்சேவைக்கான கூறுவிலையை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் 2000.12.06 ஆந் திகதி பி.ப 4.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கும் வண்ணம் இச்சேவையினை மேற்கொள்ள விரும்பும் மோட்டார் (கார்) வண்டி உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (கூறுவிலை கோருவதற்கான படிவங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.)

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(கி/1073)


## பிரிவுத்துயர் பகிர்வு

**கணபதிப்பிள்ளை வேலாயுதம்**
(இளைப்பாறிய உபதபால் அதிபர், கப்புதூ)

கரணவாய் தெற்கைச் சேர்ந்த க. வேலாயுதம் 28. 11. 2000 அன்று சிவபதமெய்தினார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கலைவாணி (மகள்)

**வைரமுத்து தருமலிங்கம்**

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வைரமுத்து தருமலிங்கம் 29 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: த. கமலநாதன் (மகன்)

**அ. அம்பிகைராஜன்**

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த அ. அம்பிகைராஜன் 28. 11. 2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

தகவல்: மனைவி

சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான் பெற்றத்தால் பெற்ற பயன்

- குறள் -

# வலம்புரி

## சமாதானக்கரு கலையாதிருக்க!

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் சந்தர்ப்பங்கள் பல தோன்றிய போதும் அவையெல்லாம் ஏதோ ஒருகாரணத்தால் கைக்குக் கிட்டியும் வாய்க்குக் கிட்டவில்லை என்றவாறு தட்டுப்பட்டது

இந்தியாவின் முன்னாள் பிரதமர் காலஞ் சென்ற இந்திராகாந்திபிரதமராக இருந்த போது இலங்கையில் தமிழர்களுக்குஉரிமை - விமோசனம் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. 1983 ஜூலையில் இலங்கைத் தமிழர் சிங்களப் பேரினவாதத்தின் வெறியாட்டத்திற்குள் சிக்கி உயிரிழந்து, உடமை இழந்த போது அச்சமயம் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்ஜயவர்த்தனாவை இந்தியாவுக்கு அழைத்து உடன் பிரச்சினைக்கு முடிவு கட்டுமாறு இந்திராகாந்தி அவரை எச்சரித்தார்.

தமிழர்களுக்கு உரிமை வழங்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டு ஜே. ஆர் நாடு திரும்பினார். ஆனால் எமது தலைவிதி அதனை அண்மித்தகாலப் பகுதியில் இந்திராகாந்தி சுட்டுக் கொலை செய்யப்பட்டு விட்டார்

இப்படியே எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த எம். ஜி. இராமச்சந்திரன் பொறுத்த நேரத்தில் மரணமாகினார். இதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்ஓர் இழுவல் நிலை ஏற்பட்டது.

இது தவிர வேறும் பல சமாதான முயற்சிகள் நெருங்கி வருவது போல் இருந்தாலும் அவையும்

# தனது காணியில் கல்விக்கூடங்களை அமைத்து ஈழத்தில் சைவமும் தமிழும்வளர்த்த பெருந்தகை

## சேர். பொன். இராமநாதன்

**சேர்.பொன் இராமநாதனின் நினைவு தினத்தை ஒட்டி இக கட்டுரைபிரசுரமாகிறது. (ஆர்)**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொழும்பில் குடியேறிய தமிழர் முகத்துவாரம், கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை முதலிய இடங்களில் வசித்தனர் அல்வாறு குடியிருந்தவர்களில் ஆங்கிலம கற்று அரச பதவிவகித்து பின்னர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் அதிகம் புகழ் பெற்ற குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் மூன்று ஆண்மக்கள் தோன்றினர் பொன்னம்பல முதலியார் இறை பக்திமிக்கவராயிருந்த படியால் பொன்னம்பல வாணேசர் கோயிலை நிறுவினார். 1905 ஆம் ஆண்டில் அக்கோயில் நிர்வாகத்தை இராமநாதன் பொறுப்பேற்று சிற்பக்கலை பொருந்திய கற்கோயிலாக அமைத்து வழங்கினார். அதே இராமநாதன் தான் யாழ். மண்ணில் புகழ் பெற்ற கல்லூரிகளையும் நிறுவித் தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இராமநாதன் கல்லூரி

ஆறுமுக நாவலர் அவர்களே சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெறுவதற்கு உழைத்தவர். அவர் தமக்குப் பின் இத் தொண்டினைத் திறம்படச் செய்வாரென்று கருதியே அவர் இராமநாதனைத் தமிழர் பிரதிநிதியாக நியமிப்பதற்குபகீரதப் பிரயத்தனஞ் செய்தார். அவரதுநம்பிக்கை வீண் போகவில்லை. சேர். பொன் இராமநாதன் இரு கல்லூரிகளைத்தாபித்ததோடு சைவ வித்தியா விருத்திச் சங்கம தோன்றுவதற்கு பேருதவி புரிந்து அச் சங்கத்தின்முதல் தலைவராகவும் இருந்தார்.

### அமெரிக்கா விஜயம்

இவர் சொலிசிற்றர் ஜெனரல் பதவியிலிருந்து இளைப்பாறிய பின்பு கல்வி வளர்ச்சியிலேயே தமது காலத்தைக் கழிக்க விரும்பினார். கல்வியே ஒரு மனிதனைப் பண்புள்ளவனாக்குவதற்குச் சிறந்த சாதனம் எனக் கருதினார் இவர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது அமெரிக்காவில் இருந்து பலர் அங்கு வந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு வற்புறுத்திக் கேட்டனர் பலர் கேட்டபடியால் அழைப்பை மறுக்க முடியவில்லை 1905ஆம்ஆண்டில் அமெரிக்காவுக்கு பிரயாணமானார். அப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பி யாழ்ப்பாணம் வந்தபொழுது சைவப் பெண்களுக்கு யாழ்ப்பாணத்தில் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார். கிறிஸ்தவகல்லூரிகளில் படிக்கும் பெண்பிள்ளைகள் மதம் மாற்றப்படுவதோடு சைவத் தமிழ்ப்பண்புக்கு மாறாக வளர்க்கப்படுவதையும் எடுத்துக் காட்டினார்.



### சைவ மகளிர் கல்லூரி

தாம் கூறிய உண்மைகளை உணர்ந்து ஒரு சைவமகளிர் கல்லூரியைத் தாபிக்கத் தீர்மானித்தார். தீர்மானித்ததும் இதற்கு வேண்டிய நிலத்தைத் தேடத் தொடங்கினார். முதல் கோப்பாயில் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தை வாங்கினார். ஆனால் அவ்விடம் போக்குவரவு வசதிக்கு உகந்ததாய் இல்லாதபடியால் வேறு இடத்தைத் தேடினார். கோப்பாயில் இவர் வாங்கிய நிவத்தில் ஒரு பகுதியிலேயே அரசினர் ஆசிரியர் கல்லூரி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பின்னர் சுன்னாகத்தில் பல வீதிகள் சந்திக்கும் இடத்தில் 25ஏக்கர் நிலத்தை வாங்கினார். இப்பூமிகுமரகுரு சுவாமிகள் போன்ற ஞானிகளின் பாதம் பட்ட புனித பூமியாகும். இக் கல்லூரியை சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் பண்ணையாக்க விருமபினார்.

### இசையும், வழிபாடும்

சாதாரண பாடங்களோடு இதிகாச புராணங்களையும் கற்பிக்க ஒழுங்கு செய்தார். இசைப் பயிற்சிக்கும் இடம் வகுத்தார். தினசரி மாணவர் படிக்கவேண்டிய தேவாரத்தையும் இசைப்பகுதியையும் சேர்த்துஒரு கை நூலாகவெளியிட்டார். பண்ணை முறையாகப் படிப்பிக்க ஓர் ஆசிரியரையும் நியமித்தார. பிள்ளைகளின் தினசரி வழிபாட்டுக்கென ஒரு கோயில் அமைத்து நடராசரையும் சிவகாமியையும் பிரதிட்டை செய்தார் அர்ச்சகர் ஒருவரை நியமித்து அவருக்குச் சம்பளம்கிரமமாகக் கொடுக்க ஒழுங்கு செய்தார். கல்லூரியைப் பரிபாலனஞ் செய்வதற்குத் தமது குடும்பத்தைச் சேர்ந்த சிலரை நியமித்தார். சில தென்னந்தோட்டங்களின் வருமானத்தையும் கல்லூரிக்கு விட்டதாகத் தெரிகிறது. பள்ளிக் கூடத்திற்கு அவர் இட்ட இலச்சினை 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள் வாய' என்பதிலிருந்து அவரது

(2 ஆம் பக்கம் பார்க்க)

# உலகை அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் கொடூரம் தவிர்ப்பது குறித்து மருத்துவர் குழாம் ஆராய்வு

உலக எய்ட்ஸ் தினமாகிய இந்நாளில் இந்நோயினால் மரணமானவர்களை நினைவு கூருவதுடன் கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களையும் மனித நேயத்

### 'எய்ட்ஸ்' பரவும் முறை

எச். ஐ. வி வைரஸ் ஆனது 80% பாலியல் மூலமாகவும், 10% இவ் வைரஸினால் தொற்றேற்பட்ட ஒருவரின் இரத்தம் மற்றவர்களிற்கு

பெறுதல், மனப் பக்குவத்தினைக் கடைப்பிடித்தல் போன்ற சில வழிமுறைகள் மூலம் இந்நோயினை ஒரளவுக்குத் தடுத்துத் தற்காத்துக் கொள்ளமுடியும்.

### மன விரக்தி

இவ் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவரை நாம் புறக்கணிப்பதால் அவ் நோயாளி மனவிரக்தியடை

இது தவிர வேறும் பல சமாதான முயற்சிகள் நெருங்கி வருவது போல் இருந்தாலும் அவையும் மழை பெய்யாத முகில் கூட்டம் போல் கலைந்து போனமை துரதிஷ்டமே.

இதற்கு நம்மிலும்பலர் இனப்பிரச்சினை தீர்ந்து விடுமோ என்ற ஏக்கப் பெரு மூச்சு விடுவதும் ஒரு காரணமாகும்.

சுயலாபம் கருதுவோர்-தமது அற்பசொற்ப இலாபங்களுக்காக இனப்பிரச்சினை தீராதிருக்க வேண்டுமென எண்ணுகின்றனர். இதனால் எத்தனை உயிரிழப்பு, எத்தனை உடமைகள் அழிவு, வாழ்வில் நிம்மதியின்மை. இவற்றை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தற்போது நம்மண்மீது சர்வதேசத்தின் பார்வை விழுந்துள்ளது. அதனால் மீண்டும் சமாதானக் கரு கட்டத் தொடங்கியுள்ளது. இக் கருவும் கலையாதிருக்க நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறைவனைப் பிரார்த்திப்போமாக!

---

இந்நாளில் இந்நோயினால் மரணமானவர்களை நினைவு கூருவதுடன் கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களையும் மனித நேயத்துடன் அனுசரித்து நடத்துவதுடன் எய்ட்ஸ் நோயினை எம் தேசத்திலிருந்து முற்றாக விரட்ட எல்லோரும் முயற்சி தொடர்வோமாக.

மேலைத்தேய நாடுகளில் ஆபத்தான ஆட்கொல்லி நோயாக விரைவாகப் பரவி வரும் இவ் 'எய்ட்ஸ்' நோயானது தற்பொழுது உலகம் பூராகவேபரந்து விரிகின்றது. இவ் எச்.ஐ.வீ எனும் வைரஸ் நோயானது (AIDS) இன்றும் எமது நாட்டிலும்குறிப்பிட்ட தொகையினரின் உடலைக் காவு கொண்டதுடன் இந் நோயினால் பீடிக்கப்பட்ட பலரது வாழ்க்கையின் குறிப்பாக இளம் குடும்பவாழ்க்கையினை கொடிய ஆபத்தான வழிக்கு ஈர்த்துள்ளன, ஈர்த்து வருகின்றன. எனவே இந் நோயானது எம்மையும் எமது நாட்டையும் இனியும் ஆட்கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்வோமாக.

இந்நோயில் இருந்துஎம்மை விடுவிப்பதற்கு முதலில்நோய் பரவும் முறை பற்றியும், அதனை தடுக்கும்முறைபற்றியும் அறிவதுடன் இந்நோயினால் பீடிக்கப்பட்ட நபர்களுடன் எவ்வாறு நாம்நடந்து கொள்ள வேண்டும்என்பதை சுருக்கமாக அறிந்து பயன் பெற முயற்சி எடுப்போமாக.

## எய்ட்ஸ் பரவும் முறை

எச். ஐ. வி வைரஸ் ஆனது 80% பாலியல் மூலமாகவும், 10% இவ் வைரஸ்சினால் தொற்றேற்பட்ட ஒருவரின் இரத்தம் மற்றவர்களிற்கு பாய்ச்சப்படுகின்றதாலும், ஒருவருக்கு ஏற்றிய ஊசியினை மற்றவருக்கு பாவிப்பதன் மூலமும் மற்றும் ஒருவருக்கு முகச்சவரம் செய்த பிளேற்றை மற்றவர் சவரம் செய்ய உபயோகிப்பதினால் ஏற்படும்காயத்தினாலும் இந் நோய் கூடுதலாகப் பரவ வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அத்துடன் ஒருவரது புற தீய பாலியல் பழக்க வழக்கங்களினாலும், மனப்பக்குவமின்மை போன்றகாரணங்களினாலும் இவ் எச். ஐ. வி. வைரஸ் பரவ வழிவகுக்கின்றன.

## தடுப்பு முறை

இந் நோயினைத் தடுப்பதற்கு எம்மை நாமே முன் எச்சரிக்கை செய்வதன் மூலம் ஓரளவு தடுக்க முடியும். ஒருவர் பின்பற்றக் கூடிய சில வழிமுறைகள் உடலுறவினை மேற்கொள்ளமுன்புஆணுறை பாவித்தல், ஒருவருக்கு ஒருத்தி என்ற நோக்கத்தை மனதில் பதித்தல்' இந்நோய் தொற்றும் முறை பற்றியும் அதனைத் தடுக்கும் முறை பற்றியும் நாம் அறிந்திருப்பதுடன், இவ் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை மற்றவர்க்கும் ஏற்படுத்துதல்.

★ பாலியல் ரீதியான பிரச்சினைக்கு தகுதியான வைத்தியர்மூலம் ஆலோசனையைப் பெறுதல், மனப் பக்குவத்தினைக் கடைப்பிடித்தல் போன்ற சில வழிமுறைகள் மூலம் இந்நோயினை ஓரளவுக்குத் தடுத்துத் தற்காத்துக் கொள்ளமுடியும்.

இவ் எச். ஐ. வி. வைரஸ் தொற்றிய ஒருவருடன் கூடியிருந்து தேனீர் அருந்துவதினாலோ ஒன்றாக இருந்து சாப்பிடுவதன் மூலமாக அல்லது ஓர் அறையில் எல்லோரும் ஒன்றாக வசிப்பதன் மூலமோஇந்நோய்த்தொற்று ஏற்படுவதில்லை.

## நோயாளியை அணுகும் முறை

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவரை அணுகும் பொழுது இந்நோயாளியினை மற்றவர்களைப் போன்றே

**சிவா**

கவனித்தல் வேண்டும். அந் நோயாளியை எய்ட்ஸ் நோயாளி எனப் பெரிதுபடுத்திப் புறக்கணிக்கக் கூடாது. இந் நோயானது இவருடன் பழகுவதன் மூலம் தொற்றிவிடும் என்றும், இவருடன் கூடித் திரிவதால் கௌரவக் குறைவாகச் சமூகம் தன்னையும் தப்பாக நினைத்து விடும் என்றும் மனதில் கொள்ளல் ஆகாது.

எம் மனதில் எம்மையறியாமலே வெறுப்பு ஏற்படும். எனவேமுதலில் எம்மை திடப்படுத்திக் கொள்வதுடன் தன்னம்பிக்கையுடனும் சேவை மனப்பான்மையுடனும் அணுக வேண்டும்.

## மன விரக்தி

இவ் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவரை நாம் புறக்கணிப்பதால் அவ் நோயாளி மனவிரக்தியடையக்கூட நேரிடலாம். இதனால் அவர் காவியாக தொழிற்பட்டு மற்றவர்களிற்கு பலவந்தமாக பரப்ப முற்படுவர். ஆகவே அந் நோயாளியுடன்மனம் நோகாதவண்ணம் அன்புடனும், கருணையுடனும் பழக வேண்டும்.

மற்றும்அவ் எய்ட்ஸ்நோயாளியிடம் அவரது நோய் பற்றி மீண்டும், மீண்டும் துருவிக் கேட்பதை தவிர்ப்பதுடன் ஆறுதலை அளிக்கக்கூடிய விஷயங்களைபகிர்ந்து கொள்ளல் வேண்டும்.

அந்நபர் எய்ட்ஸ் நோயாளி என்ற எண்ணக் கருவை அவர் முன்வைக்காது பழகுதல் வேண்டும்.

எனவே தன்னை இக் கொடிய ஆட்கொல்லி நோயான எய்ட்ஸில்இருந்து தற்காத்துக் கொள்வதுடன் தனது நாட்டினையும் இவ் 'எய்ட்ஸ்' நோயிலிருந்து விடுவிக்க எல்லோரும் தம்மால் ஆன முயற்சியினை மேற்கொண்டு 'எய்ட்ஸ்' நோய் தாக்கத்திற்குள்ளாகாமல் பர்துகாப்போமாக.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# பிரபாகரனின் சமாதானஅறிவிப்பை அரசுபயன் படுத்திகொள்ளவேண்டும்

## தேசியசமாதானப் பேரவை பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் நிபந்தனையற்ற பேச்சுக்கு தாம்தயார் என்ற நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ள இவ் வேளையில், அரசாங்கமும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒருமித்த குறிக்கோளுடன் பேச்சுவார்த்தை மேடையில் இருதரப்பும் சந்திக்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தேசிய சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கலாநிதி டிலான் பெரேரா தெரிவித்தார்,

யுத்தமும் வன்முறையும் வேண்டாமென்ற தொனிப்பொருளில் ஒரு கிலோ மீற்றர் நீளமான பதாதை அமைத்து அவற்றின் மூலம் யுத்தத்தின் கோரத் தாக்கத்தை உலகிற்கு அம்பலப்படுத்த மக்கள் சமாதான முன்னணி எடுத்த நடவடிக்கையை விளக்கும் வகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

யுத்தமும் வன்முறையும் நாட்டிலிருந்து அகன்று சமாதான சூழ்நிலை ஏற்பட அனைவரும் ஒருமித்த குறிக்கோளுடன இதய சுத்தியாகப் பாடுபட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (இ)

# ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு, வேலணை ஆகிய பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதல்களை நேற்று மேற்கொண்ட வண்ணம் இருந்ததாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று இரவு 9.45 மணி முதல் 10 45 மணி வரை தொடர்ச்சியாக இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரின் இத் தாக்குதலின் போது பதில் தாக்குதல்கள் எதுவும் இடம் பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் எறிகணைகள் கல்முனை, பூநகரிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது ம-110

# தரம் 9விடைத்தாள் மதிப்பீட்டை தீவக ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பர்!

## இலங்கை ஆசிரியர் சங்கக்கிளை முடிவு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைய தரம் 9 இற்கு நடைபெறவுள்ள மாவட்ட மட்டப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் வேலைகளைப் பகிஷ்கரிப்பது என்று தீவக கல்வி வலயஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்க தீவக வலயக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் கடந்த 29ஆம் திகதி வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது

தீவக கல்வி வலயத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் நீண்டகாலமாக இடமாற்ற மெதுவுமின்றி கஷ்டங்களை அனுபவித்துவருவதையும், செயற்றிறனுள்ள இடமாற்ற சபை யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில்காணப்படாமையுமே மேற்படி பகிஷ்கரிப்புக்கான காரணமென்று தெரிவிக்கப்படுகிறது.

இடமாற்ற சபைஒன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் அடுத்த ஆண்டில் இடமாற்றங்களை மேற்கொள்வதை வலியுறுத்தி தொழிற் சங்க நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என்ற தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ)

# 2000ம் ஆண்டின் எயிட்ஸ் நோயின் கருப்பொருள்

(யாழ்ப்பாணம்)

எச். ஐ. வி அபாயத்திற்கு அதிகம் முகம் கொடுப்பவர்கள் பெண்களாக இருந்தாலும் இந்த ஆபத்தை ஏற்படுத்தும் பிரதான காரணியாக ஆண்களின் வேறுபட்ட நடத்தைக் கோலங்களே அமைகின்றன.

இக் கருத்தை வெளிப்படுத்தும் வகையிலேயே இவ்வருட எயிட்ஸ் நோய்க்குரிய கருப்பொருளாக ''ஆண்கள் வேறுபாட்டை ஏற்படுத்துகிறார்கள்'' என்ற வாசகம் அமைகிறது.

ஆண்களுக்குரிய சில கலாசாரப் பழக்க வழக்கங்கள் பாலியல் மேலாதிக்கம் போன்ற உடல், உளவளக் காரணிகள் எயிட்ஸ் நோய் தொற்றுக்களை வேறுபட்ட பரவல் முறைகளை நிர்ணயம் செய்கின்றன.

உலகில் மனித ஆண்வர்க்கம் ஒரு கணம் தமது பாலியல் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டால் அக் கணத்தில் எச். ஐ. வி ஒரு நபருக்கு தொற்றுவதற்கான சாத்தியம் வெறும் மூன்று வீதம் கூட இராது. (5)

–நன்றி தினக்குரல்–

# 124 இலங்கைதமிழர்கைது

துருக்கியிலிருந்து படகு மூலம் இத்தாலிக்குள் சட்ட விரோதமாக நுழையமுயன்ற 124 இலங்கைத் தமிழர்கள் இத்தாலிப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

இத்தாலியின் கரையோரப் பிரதேசமான சிசினி என்னும் இடத்தில் வந்திறங்கிய இவர்கள் பொலிசாரைக் கண்டதும் தப்பியோடமுயற்சித்தனர். அதன் போதே பொலிசார் இவர்களைத் துரத்திப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் நோய்வாய்ப்பட்டவர்களாக இருப்பதனால் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# எயிட்ஸ் கருத்தரங்கு

அனைத்துலக எயிட்ஸ் தினமான இன்று யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் எயிட்ஸ்நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் கருத்தரங்குகள் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

யாழ் மாநகரசபையின் பகுதிக்குட்பட்ட சனசமூகநிலையங்கள், முன்பள்ளிகள், சிகிச்சைநிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளில் இக் கருத்தரங்குகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது?

# அடிக்கல் நாட்டுவிழா

சங்கரத்தை வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புதிய வாகன சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று பகல் 12 மணிக்கு இடம் பெறும்.

இந்நிகழ்வில் வலிமேற்குப் பிரதேசசபைத் தலைவரும் இந்துமகாசபையின் போசகருமான என். திரிலோகநாதன் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைப்பார்.

இப்புதிய வாகனசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (ம)

# ஸ்தாபகர் தினம்

புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலய ஸ்தாபகர் தினமும் ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறைத் திறப்பு விழாவும் எதிர்வரும் 5ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு, பாடசாலையின் பிரதான மண்டபத்தில்நடைபெறும்.

பாடசாலை அதிபர் எஸ். கே, சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தீவகவலயக் கல்விப் மணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைப் பேராசிரியர் வி. சிவசாமி, வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தியும் கலந்து கொள்கின்றனர்.

ஸ்தாபகரின் திருவுருப் படத்தை யாழ்.பல்கலைக்கழக புவியல்துறைப் பேராசிரியர் கா.குகபாலன் திரை நீக்கம் செய்வார். நினைவுப் பேருரையை வடமாநில சர்வோதய அமைப்பாளர் க. திருநாவுக்கரசு நிகழ்த்துவர்.

### ஜனாதிபதி...

டிஷ் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னுடன் பேசவிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நிபந்தனை அற்ற சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பிரபாகரனின் அறிவிப்பிற்கு அரசின் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி சந்திரிகா பீற்றர் ஹெய்னுடன் நடத்தும் பேச்சின் போது வெளியிடுவார் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

### திருமலையில்...

இடத்தில் இருந்து திருமலை நோக்கி கடற்படையினரின் வாகனம் சென்றபோது கலப்பை ஆறு. மற்றும் 18ம் கட்டை ஆகிய பிரதேசங்களுக்கிடையில் இக்கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது,

இக்கிளைமோர்த் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது காயமடைந்த படையினர் திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### இன்றும்...

கடைப்பிடிக்க புலிகளும் அரசும் இணக்கம் தெரிவித்துள்ளன.

'யுனிசெவ்' அமைப்பு விடுத்த வேண்டுகோளை ஏற்று இருதரப்பும் யுத்த நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வி)

### பிரிட்டிஷ்...

கைத் தூதுவராலயத்தை மேற்கோள் காட்டி பி.பி.சியின் சந்தேசிய சேவை இதனை நேற்று அறிவித்தது.

அடுத்தவாரம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரைச் சந்திக்கும் ஜனாதிபதி சந்திரிகா இலங்கை இனப்பிரச்சினை குறித்தும், அரசு - புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விரிவாக எடுத்துக் கூறுவார் என அச் செய்திமேலும் தெரிவித்துள்ளது. (ந)

### கண்ணிவெடி...

சாலைக்கு எடுத்துச் சென்ற போது அங்கு 4 இராணுவத்தினர் மரணமடைந்தனர், காயமடைந்துள்ள 13 இராணுவத்தினரில் மேலும் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கண்ணி வெடித் தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

லீவில் சென்ற இராணுவத்தினர் மீண்டும் கடமைக்காக மன்னாருக்கு ட்ரக் வண்டியில் சென்ற போதே தாக்குதலுக்கு இலக்கானது.

இக்கண்ணி வெடிவிபத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரில்இருவர்லெப்டினண்ட்தர அதிகாரிகளாவர், கொல்லப்பட்ட இராணுவ லெப்டினண்ட்தர அதிகாரிகள்சரத் மற்றும் சேனரத்தினா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களில் இரண்டு அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து காணப்பட்டது.

இக் கண்ணிவெடித் தாக்குதல்களை அடுத்து வவுனியா நகரப்பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது. (வ)

### பிரதிப்...

ஜனாதிபதி நாட்டில் இல்லாத போதும் முக்கிய பிரதியமைச்சர்கள் தெரிவு இடம் பெற்றிருக்கின்றமை, இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். (இ)

### அரசு...

நிலைப்பாட்டை விளக்கும் வகையிலான ஆவணங்களே விடுதலைப் புலிகளிடம் பரிமாறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆவணங்களின் பரிமாற்றம் சமாதான முயற்சியில் புதியதோர் திருப்பத்தை உண்டு பண்ணுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (வ)

### பிரபாவின் ..

ளார்.

பிரதி அமைச்சர் கார்ல் இண்டர் பேர்த் ஐரோப்பிய வானொலி ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தார். அப்பேட்டியின்போது அவர் கூறியதாவது;

தமிழ் ஈழம் அமைப்பது தொடர்பாக எந்தவொரு இடத்திலும் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் தெரிவிக்கவில்லை.

நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு தயார் என அவர் அறிவித்துள்ளமையும்;

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்றும் பிரதிஅமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார் (வ)


## 45ம் நாள் நினைவு அழைப்பிதழ்

**02 - 12 - 2000**

அன்புடையீர்!

19-10-2000 வியாழக்கிழமை அகாலமரணமடைந்த எமது அன்புச்செல்வம்

**அமரர் மயில்வாகனம் நிமலராஜன்**

(சர்வதேச சுதந்திர பத்திரிகையாளர்)

அவர்களது 45ம் நாள் நினைவுத் திருப்பலி சுண்டுக்குளி, ஆஸ்பத்திரி வீதி, புனித யுவானியார் ஆலயத்தில் 02-12-2000 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்வதுடன் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

17/3, கச்சேரி நல்லூர் வீதி,
(புகையிரத பாதை வழியாக)
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(கி.1072)



## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

தபு, ஜோதிகா, இலட்சுமி நடிப்பில்

**'சிநேகிதியே'**

(மர்மங்கள்நிறைந்தபடம்)

புதிய வெளியீடு

10.30—2-30(ப·நேரம்)

[கி-688


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;